சுற்றறிக்கை எண் 3 /2005
ந.க.எண். பணி 5(1) 32208.2004

வருவாய் நிருவாகம்,
பேரிடர் மேலாண்மை மற்றும்
பேரிடர் தணிக்கும் துறை,
எழிலகம், சென்னை – 5

நாள் 31.1.2005

திரு ஆர். சந்தானம், இ.ஆ.ப.,
சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர்.

## சுற்றறிக்கை

பொருள்– கிராம நிர்வாகம் – மேம்படுத்துதல் கிராம நிர்வாக அலுவலர்களின் பணியை ஆய்வு செய்யும் பொருட்டு நாட்குறிப்பு ஏற்படுத்தி ஆணையிடப்பட்டது. தொடர் நடவடிக்கை எடுக்க கோருவது –தொடர்பாக,

பார்வை–

1. அரசாணை (நிலை) எண் 212, வருவாய்த் (பணி 7(1) துறை, நாள் 29.4.99
2. அரசு கடித எண் 60241 பணி 7(1) .2002/2 நாள் 11.4.2002
3. இவ்வலுவலக சுற்றறிக்கை எண் பணி 5(2) 9266/99 நாள் 22.4.2002.
4. இவ்வலுவலக சுற்றறிக்கை எண் பணி 5(1)7207.99 நாள் 31.7.2003.
5. இவ்வலுவலக சுற்றறிக்கை எண் பணி 5(1)60765/2003 நாள் 7.11.2003.
6. இவ்வலுவலக சுற்றறிக்கை எண் பணி 5(21 76816.2003, நாள்13.11.2003.

✉✉✉✉✉

கடந்த 23.9.2004 அன்று நடைபெற்ற அனைத்து மாவட்ட வருவாய் அலுவலர்கள் கூட்டத்தின்போது அறிவுறுத்தியதின் பேரில் கோவை, வேலூர் காஞ்சிபுரம் மதுரை மற்றும் திருவள்ளூர் மாவட்ட வருவாய் அலுவலர்களால் அம் மாவட்டத்தில் சில குறிப்பிட்ட வட்டங்களில் பணிபுரியும் கிராம நிர்வாக அலுவலர்கள் சமர்ப்பித்த நாட்குறிப்புகளை பரிசீலனை செய்யப்பட்டது. அதில் பின்வருமாறு குறைபாடுகள் காணப்பட்டன.

(1) பணிபுரியும் கிராம நிர்வாக அலுவர்களில் நாட்குறிப்பு சமர்ப்பிக்காதவர்கள் அதிகம் காணப்படுகின்றனர்.

(2) நாட்குறிப்பு அரசாணை எண் 212 வருவாய்த் ( பணி 7–1) துறை நாள் 29.4.99ல் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை ( படிவம் இணைத்தனுப்பப்படுகிறது.).

(3) நாட்குறிப்புகளில் பெரும்பாலும் அலுவலகப் பணி தலைமையிடம் ஜமாபந்தி மற்றும் பணி சான்று வழங்கும் பணி என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. அவை விவரமாக தெரிவிக்கப்படவில்லை.

(4) அதனை மண்டல துணை வட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியரால் ஆய்வு செய்யாமலும் நாட்குறிப்பில் சுட்டிக்காட்டப்பட வேண்டிய குறைபாடுகள் குறித்து தொடர் நடவடிக்கை மேற்கொண்டதாகவும் தெரியவில்லை.

(5) நாட்குறிப்பு சமர்ப்பிக்காத கிராம நிர்வாக அலுவலர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம் தெரியவில்லை.

2) கிராம நிர்வாகத்தை மேம்படுத்தும் வகையில் கிராம நிர்வாக அலுவலர்கள் ஆற்றும் பணியை கண்டறிவதற்காக கிராம நிர்வாக அலுவலர்களது பணியை ஆய்வு செய்து அதன் அடிப்படையில் கிராம நிர்வாக அலுவர்களுக்கு நாட்குறிப்பு ஒன்று ஏற்படுத்துவது மகவும் அவசியமாகிறது என கருதி கிராம நிர்வாக அலுவலர்களால் ஒவ்வொரு மாதத்தின் முதல் அரை திங்களுக்கான நாட்குறிப்பை அம்மாதத்தின் 18ம் தேதியன்றும் இரண்டாம் அரைத் திங்களின் நாட்குறிப்பு அடுத்த மாதத்தின் 3ம் ஆய்வுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என பார்வை ஒன்றில் குறிப்பிட்டுள்ள அரசாணையில் அரசு ஆணையிட்டுள்ளது. அதனை வழுவாது கடைபிடிக்குமாறும் மேற்படி அரசாணையை தவறாது நடைமுறைப்படுத்துமாறும் அரசு கடித எண் 60241/ பணி 7(1) 2001–02 நாள்

11.4.2002ல் அரசு வலியுறுத்தியுள்ளது. மேலும் நாட்குறிப்பு சமர்ப்பிக்க தவறும் கிராம நிர்வாக அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும் அரசு வலியுறுத்தியுள்ளது.

3) எனவே கிராம நிர்வாக அலுவலர்கள் அனைவரும் தவறாமல் மாதமிருமுறை நாட்குறிப்பு சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும். அவ்வாறு சமர்ப்பிக்கும் நாட்குறிப்பில் அவர்களால் நாள்தோறும் ஆற்றிய பணிகள் குறித்த விரிவான விவரம் தரவேண்டும். குறிப்பாக கீழ்கண்ட இனங்களில் மிகவும் தெளிவான விவரங்கள் தர வேண்டும்.

(1) வரிவசூல் (2) பயிராய்வு (3) புலத்தணிக்கை (4) கணக்குகள் பராமரித்தல் (5) சான்று வழங்குதல் (6) அலுவலகப் பணி என்றால் என்ன பணி செய்தது (7) பட்டா மாற்றம் (8) ஆக்கிரமிப்புகள் பணி (9) பிறப்பு இறப்பு பதிவு செய்தல் (10) சமூக நலத்திட்டங்கள் பணி (11) எத்தனை பட்டதாரிகள் சந்தித்தார்கள் மற்றும் இதரப்பணிகள். அவ்வாறு சமர்ப்பிக்கும் நாட்குறிப்புகள் மண்டல துணை வட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியரால் ஆய்வு செய்து காலதாமதம், ஆய்வில் ஏற்பட்ட குறைபாடுகள் மற்றும் செய்ய வேண்டிய வேலைகள் போன்றவைகளை குறிப்பிட்டு தொடர் நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டும்.

4) மேலும் கிராம நிர்வாக அலுவலர்களும் மற்றும் அரசு அலுவலர்களை போல காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரையில் பணியில் இருக்க வேண்டும் எனவும். அவர்கள் பல்வேறு பணிகளுக்காக அந்தந்த கிராமங்களுடைய உட்கிடை பகுதிகளுக்கு செல்ல வேண்டிய நிலை இருந்தாலும் அவர்கள் காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை கட்டாயம் அவர்களது அலுவலகத்தில் அவர்கள் இருந்து பணிபுரியு வேண்டும் எனவும் மாலை 5.45 வரை கட்டாயம் பணியில் இருக்க வேண்டும் எனவம் பார்வை ஆறில் உள்ள இவ்வலுவலக சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் அவர்கள் முகாம் செல்லும் விவரத்தை அலுவலக தகவல் பலகையில் குறிப்பிட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுளளது. கிராம மக்களது குறைகளை தெரிவிக்க ஒவ்வொரு கிராம நிர்வாக

அலுவலரது அலுவலகத்திலும் புகார் பெட்டி வைத்து மனுக்கள் பெறப்பட்டு பரிசீலனை செய்து குறைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டியது அவசியம். இது குறித்து ஏற்கனவே வழங்கப்பட்ட அறிவரைகளை தவறாது கடைபிடிக்க வேண்டும்.

5) கிராம நிர்வாக அலுவலர்கள் நாட்குறிப்பு குறித்து பார்வை ஒன்றிலுள்ள அரசாணையில் 1999ம் ஆண்டிலேயே ஆணையிடப்படும் அதில் வழங்கப்பட்ட அறிவுரைகள் மற்றும் ஆணையை உரிய முறையில் நடைமுறைப்படுத்தாதது என்பது மிகவும் வருந்தத்தக்கதாகம். இனி வருங்காலங்களில் இதனை தவறாது கடைபிடிக்குமாறும் மாவட்ட மாதாந்திர கூட்டத்தில் இந்த பொருளையும் நிகழ்ச்சி நிரலில் (agenda) கொண்டு வந்து, இதன் முன்னேற்றத்தை ஒவ்வொரு மாதமும் கூர்ந்து கவனிக்குமாறும் மேற்கண்டவாறு சட்டிக்காட்டப்பட்டுள்ள குறைகளை களைந்து உரிய நடவடிக்கையினை மேற்கொண்டு கிராம நிர்வாகத்தை மேம்படுத்துமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் ஒப்புக்காக நாட்குறிப்பு பெறுவது சிறந்த நிர்வாகத்திற்கு உகந்ததல்ல என்பதை கருத்தில் கொள்ளுமாறும் அனைத்து மாவட்ட வருவாய் அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

7) இச்சுற்றறிக்கையை பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதல் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்./ – து.நா. இராமநாதன்,
கூடுதல் ஆணையர் (வ.நி.)
சிறப்பு ஆணையர் மற்றும்
வருவாய் நிருவாக அணையருக்காக.

பெறுநர்
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,( இணைப்புடன்)